# சாதகர்க்குரிய சத்தான நெறிகள்

## ஸ்ரீ முருகனார் அருளியது

The Disciplines that are essential in the Spiritual Aspirant

graciously rendered by Sri Muruganar

Translated and annotated by:

Robert Butler

© Sri Ramanasramam

First edition 2020

## Contents

Foreword iv
The Disciplines that are essential in the Spiritual Aspirant 1
Notes 38

## Foreword

In January of 2020 I was approached by devotees of Sri Ramana Maharshi to translate a small booklet of 96 sayings, composed for the benefit of *sadhakas* by Sri Ramana's most celebrated devotee, Mukavai Kanna Muruganar, a request with which I was willing to comply, having already translated a number of Sri Muruganar's compositions, both in prose and in verse. I began the work but with always in the back of my mind the idea that I would like to have the opinion of at least one other qualified person as to the accuracy of the translation before I ventured to have it published.

The obvious choice, and my own preferred option, was Michael James, who, as a close associate of Sri Sadhu Om, was involved in the study and translation of Muruganar's works for many years and continued to be so after Sadhu Om's passing. I contacted Michael and he agreed to look over the draft and suggest such amendments as he felt necessary. Not only that, he discovered that in his computer archives he possessed a series of scans of the original manuscript of the 96 sayings in Muruganar's own hand and forwarded copies of them to me. These he had obtained by courtesy of the Sri Ramana Maharshi Archive at Sri Ramanasramam. Michael explained to me that initially Muruganar explicitly left all his manuscripts in the care of Sadhu Om and that eventually, a few years ago, it was agreed that they should be handed over to the Sri Ramanashramam archives for preservation.

By this time I was well advanced in the translation, working from a printed booklet of the sayings, which had first been published by Sri Ramanashramam in 2008 and was now in its third printing. Although available only in Tamil, the little booklet seems to have made quite an impact with devotees as it is now in its third printing of 2000 copies each. As I worked through the sayings I noticed that in just a few instances there appeared to be errors of either sense or grammar or both, and in those cases I made educated guesses as to what the error in the original transcription might have been in order to restore to a given saying its intended meaning. When the scans came into my possession I was able to verify that my guesses, apart from one, were correct and the printed version contained a few errors, due mainly to the fact that at many points Muruganar's handwriting becomes rather flowing and cursive, such that on occasion certain letters could only be identified with certainty by careful analysis of the written glyph or glyphs, a process which involved enlarging them and comparing them with other instances of the same glyph or grouping of glyphs elsewhere in the text.

It then occurred to me that, since the scans were in my possession and would be of great interest to devotees of both Muruganar and Sri Ramana, I should include them in the translated work, with the scans and printed version in Tamil and English on facing pages.

In the printed version this group of 96 sayings bears the title *cātakarkkuriya cattāṉa neṟikaḷ,* which has been translated as *The Disciplines that are essential in the Spiritual Aspirant*. This title does not appear in the series of scans, which begin merely, as the reader will see, with an Invocation to Sri Ramana followed by a brief, single paragraph Introduction.

Before he came to Sri Ramana as a devotee at the age of 36 Muruganar had been a distinguished Tamil pandit and was deeply versed in the Classical texts of the Tamil language. It is no surprise therefore that these saying are peppered with allusions to and quotations from a number of the great devotional and ethical texts of the Tamil language, such as the *Tirukural* of Tiruvalluvar, the *Tiruvacakam* of Manikkavacakar and the *Kondrai Ventan* of Auvaiyar. These references are not identified precisely in the text and sometimes not at all. Therefore notes have been added at the end to give this extra information. In addition there are notes giving additional, explanatory material, suggested by the content of the saying in question and other notes giving the textual variations between the original MS and the printed version published by Sri Ramanasramam, as explained earlier. Sayings for which a note is present are marked with an asterisk next to the number in the margin.

It is hoped that the publication of this work will be of benefit to all seekers on the spiritual path and that the inclusion of scans of the original manuscript will provide in many cases an added incentive for them to persevere on that path.

*Robert Butler*
*Wilmslow*
*Cheshire*
*February 2020.*

**Postscript -** *July 2020*

At the time of publishing Michael has only been able to check the work up to saying 20. However the verses have been checked in full by N. Sankaran in Tiruvannamalai, who also suggested the Dedicatory verse to Bhagavan. I was also able to obtain a version of the verses done some years ago by David Godman and T. N. Venakatsubramanian.

# நூற்பயன்

அறிவொளியாந் தன்மெய் யகத்தலரப் பெற்றால்
நிறைவெளியா மம்மெய்ந் நிலைக்கட் கனாப்போற்
பிறவுணர்வெல் லாங்கற் பிதமாகப் பேரும்
முறையுளியோர்ந் தாலகத்து மோனமன்றி யின்றே.

உண்மை யுணர்ந்தோ ருணரார் பிறிதென்னில்
வின்மையே போல வெறுகற் பிதந்துவிதம்
வண்மைசேர் சுத்தவருள் வாலறிவா வைகுமுண்மைக்
கண்ணதுதா னந்தமிலாக் கண்ணாங்கை வல்லியமே.

ஸ்ரீ குருரமணப் பிரசாதம் *vv. 284 - 285.*

# Benefit of this Work


*If one attains the state in which the reality of one's own Self, the light of consciousness, blossoms within the Heart, in that true state of all-embracing emptiness, all other knowledge will be revealed as false and disappear like a dream. If one investigates inwardly in the prescribed fashion, it will be known that in the Heart, apart from mauna itself, nothing else exists.*

*If we say that those who know the Real are not cognisant of anything existing apart from it, then it follows that duality is an empty illusion, like the blue of a blue sky. The eye of truth, which abides as pure consciousness, pure grace possessing power and beauty, is indeed the Absolute, the infinite eye.*

*Sri Guru Ramana Prasadam vv. 284-285.*

## சாதகர்க்குரிய சத்தான நெறிகள்

### ஓம் நமோபகவதே ஸ்ரீ ரமணாய




அயல்வழியிற் செல்லா தறிவொளியா முண்மை
யியல்வழிக்கே சிந்தை யியங்க — உயல்வழியா
நின்றகுரு பாதம்என் னெஞ்சத்தில்
வேரிறங்கி மன்றவளர் மோனமலை.

*The holy feet of the guru, abiding as the path of liberation, sank their roots into my Heart and rose on high as the Mountain of divine silence, so that my thoughts, no longer travelling on the outward path, moved now on the true path of the Reality which is the light of pure awareness.*

*Sri Ramana Jnana Bodham, Vol. 3, v. 425*

# சாதகர்க்குரிய சத்தான நெறிகள்

The Disciplines that are essential in the Spiritual Aspirant



Printed by Sri Ramana Mandiram for அகண்ட பரவேச ஆற்றின்

Manuscript 1

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய.

—

உண்மை முடிவில் உறுதிபயப்பதாயினும் முதலிற் கேட்குங்கால் எல்லோர்க்கும் பொதுவாக உவகை தருவதன்றாம்; எனவே இங்குரைக்கப்படும் முடிந்தவுண்மைகள் சில அவ்வொரு சாரார் மேலெழுந்த நோக்கில் தங் கொள்கைக் ~~கொள்கைக்~~ கொள்வாமையால் ஒரோருகா லுடன்படாது மறுக்கப்படுவவேனும் பொறுக்கற்பாலவர்.

—

1. இறைவடிவ மிரண்டாவன் சகளம், சகுணம் சுத்தமாயா காரியம்; பரமார்த்தமன்று. அஃது அப்பிரமேயத்தேமெனல் ஔபசாரிகமாம்.
2. அறிவை யறிந்தோர்க் கபாய மில்லை.
3. உணர்ந்தோர்க்குண்மை உறுதி பயக்கும்
4. வறட்டுவாதமும் வறட்டையும்பு; அனுபவ ஞானம் ஆயிரம் பொன்.
5. அகந்தையொழிவே அமரநிலையாம்: அகந்தைத் தியாகம் அரிதினுமரிது.
6. சாதுக்கள் பணிக்காகவன்றி, அறிந்தோர் விடுதலைக்கடுத்தட செல்லுதலும், அதனினும்

இயல்பற்றது  உபதேசம்

உண்மை முடிவில் உறுதி பயப்பதாயினும் முதலிற் கேட்குங்கால் எல்லோர்க்கும் பொதுவாக உவகை தருவதன்றாம்; எனவே இங்குரைக்கப்படும் முடிந்த வுண்மைகள் சில ஒவ்வொரு சாரார் மேலெழுந்த நோக்கில் தங்கொள்கைக் கொவ்வாமையால் ஒரொருகா லுடன்படாது மறுக்கக் கருதுவரேனும் பொறுக்கக் கடவர். – முகவைக் கண்ண முருகனார்.

*Although the truth will in the end foster certainty, it will not necessarily be equally pleasing to all when they first hear it. Hence the final truths here expressed may not in some cases, upon a superficial examination, accord with the views of those of every persuasion. Therefore they should be treated with indulgence, even by those who here and there are tempted to disagree with them and reject them.*

*– Mukavai Kanna Muruganar.*

1* இறை வடிவ மிரண்டனுள் சகளம் சகுணம் சுத்த மாயா காரியம்; பரமார்த்த மன்று. அஃது அப்பிராகிருத மெனல் ஔபசாரிகமாம்.

Of the two forms of God, that which is termed 'with form' or 'with attributes' is the product of pure *māyā*; it is not the Supreme. The term 'transcendental' is applied to it only in a metaphorical sense.

2 அறிவை யறிந்தோர்க் கபாய மில்லை.

For those who know [the nature of] consciousness there is no danger.

3 உணர்ந்தோர்க் குண்மை உறுதி பயக்கும்

For those who come to know the Truth, the Truth itself will foster certainty.

4* வறட்டு வாதம் வறட்டெலும்பு; அனுபவ ஞானம் ஆயிரம் பொன்.

Empty disputation is like dry bones. Knowledge born of experience is worth a thousand gold pieces.

5 அகந்தை யொழிவே அமர நிலையாம்; அகந்தைத் தியாகம் அரிதிலுமரிது.

Eradication of the ego is the state of immortality. Therefore the renunciation of the ego is that which is most rare and precious.

6 சாதுக்கள் பிக்ஷைக்காகவன்றி, அறிந்தோர் வீடுக்களுக் கடிக்கடி செல்லுதலும், அதனிலும் ஆங்கே தங்கி அவர்களோடு கூடிக் குலாவலும் அறவே அடாது.

Other than for obtaining alms, it is quite inappropriate for *sadhus* to pay regular visits to the houses of their acquaintances and even less appropriate for them to remain there, associating with them in a convivial fashion.

2

ஆங்கே தங்கி அவர்களோடு கூடிக் குலாவ லும் அறவே அடாது.

7 'டாக்கி', 'சினிமா' முதலிய விடங்களில் ஸா துக்கள் காணப்படுவது அறிஞரால் அருவருக் கத்தக்க அவமானகரமாம்.

8. ஆடோப அலங்கார மற்ற வீட்டில் இயல்பாக விளங்கும் அதிஷ்டான ஆன்ம (சொரூப) ஞானமே அருளென்பதன் பொருளாம்.

9. அருளை மறைப்பது மருள்; மருளாவது ஜீவபோத மென்னும் மனவுணர்வு. அது சகலகேவல மென இருதிறப்படும்; சகலம் கேவலம் - நினைப்பு மறப்பு. அவ்விரண்டு மற்றதே சுத்த மென்னுந் துரியநிலை. ஜீவபோதம் சமானிய திருஷ்டியில் உண்மை யுடையதாகக் கருதப்படுதலை நோக்கி, அஃதழிந்த சிவபோத மென்னும் ஆன்மஞானம் நேரா விடத்தே அஞ்ஞானியென்றும் பசுவென்றும் உரைக் கப்படும். 'கள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே' [இருளிடத் தன்னைச் சிக்கெனப் பிடித்தேனே] என்றெம்பெருமான் அன்றோர் வாக்கிலாவதிக.

10 பரமுணர்ந்தோனே பார்ப்பான்.

11. ஜீவன் கயிற்றிற் பாம்புபோலான்மாவிற் கற்பிதன்.

12. ஒவ்வோருயிர்க்கும் இயல்பாகவே தன்னிடத்து நிகழுமின்பால் ஆன்மா சுகசொரூபமாம். அகந்தை

7 *டாக்கி, சினிமா முதலிய விடங்களில் ஸாதுக்கள் காணப்படுவது அறிஞரால் அருவருக்கத் தக்க அவமானகரமாம்.*

For *sadhus* to be seen in such places as ‘the talkies’ or ‘the cinema’ is the kind of shameful sight that will be viewed with disgust by the wise.

8 *ஆரோப அகங்காரமற்ற விடத்தில் இயல்பாக விளங்கும் அதிஷ்டான ஆன்ம (சொரூப) ஞானமே அருளென்பதன் பொருளாம்.*

Awareness of oneself, one’s real nature, which is the foundation (*adhiṣṭhāna*) that shines naturally in the place where the superimposed ego is eradicated, alone is the meaning of what is called ‘grace’.

9* *அருளை மறைப்பது மருள்; மருளாவது ஜீவபோத மென்னும் மனவுணர்வு. அது சகல கேவல மென இருதிறப்படும். சகல கேவலம் – நினைப்பு, மறப்பு. அவ்விரண்டு மற்றதே சுத்த மென்னுந் துரிய நிலை. ஜீவபோதம் சாமானிய திருஷ்டியில் உண்மை யுடையதாக் கருதப்படுதலை நோக்கி, அஃதழிந்த சிவபோத மென்னும் ஆன்ம ஞானம் ஒரோவிடத்தே சூனியமென்றும் பாழென்றும் உரைக்கப்படும்.*

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே.
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்.

*என்றாற் போன்ற ஆன்றோர் வாக்குகளாலறிக.*

Delusion (*maruḷ*) is that which masks grace (*aruḷ*). Delusion is the mental awareness known as ‘ego consciousness’, consisting of the two states, *sakalam* (the waking and dream states) and *kevalam* (the deep sleep state, unconditioned consciousness, which is falsely identified by the *jīva* as unconsciousness). These equate to thinking and absence of thought. That which is free of these two is the pure state, *cuttam* (*śuddha*), which is known as *turiyam*. From the ordinary perspective in which the ego consciousness is believed to be real, the knowledge of the Self, the Siva-consciousness in which the former (ego consciousness) is annihilated, is described variously as ‘emptiness’ or ‘a void’. This idea is expressed in the compositions of the great ones in such statements as:


Lord, you who in deepest darkness perform your cosmic dance!
In the darkness I grasped you and held you tight.

10* *பரமுணர்ந் தோனே பார்ப்பான்.*

He only is a Brahmin (Seer) who knows the Supreme Reality.

11 *ஜீவன் கயிற்றிற் பாம்புபோ லான்மாவிற் கற்பிதன்.*

The ego-self (*jīva*) is an imaginary appearance in the Self, like the snake [erroneously perceived] in the rope.


3

யற ஆன்மசொருபத்தை உள்ளபடி யுணர்ந்தோர்க்கு
அவ்வடிவாகவே விளங்கும் பரனிடம் சுபாவ
மாகவே கசியும் பக்தியால் ஆன்மஞானமே
பரபக்தியென்று வேறு பெயராற் கூறப்படுவதாம்.
எனவே பரபக்தியும் அபரோக்க ஞானமும்
வேறன்றாம்.

13 ஸாதகர் உலகியற் பத்திரிகைமோகம் ஒழியக்
கடவர்.

14 அறிவைத்தவிர்த்துமற் றகிலமொன்றில்லை.

15 நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை.

16 முத்தியிலேனை மூன்று மடக்கம்

17 வீட்டினு மிக்க விழுப்பதமில்லை.

18 தன்னைப் போலப் பிறனை நினை.

19 மனத்தைப்போல விவத்தையற்றது வேறில்லை
அதன் காட்சி அறவே நம்பத்தக்கதன்று.
வியபிசரித்தலே மனத்தின் சுபாவம்; அற்றம்
பார்த்து ஸாதகனைக் காலைவாரிவிட்டு விஷயங்
களிற் பாயும். மனம் உயிர்த்திருக்குமளவும்
அதன் குணமும் மாறாது. எனவே, இடையறாத்
தியானவிசாரங்களால் மனத்தை அடியோ
டழிக்கவேண்டும். அவ்வாறு கெடுக்கும்வரை
அதிருணெவனும் கிருதகிருத்தியனாக அன்மதிபுற
லாகாது.

12* ஒவ்வோருயிர்க்கும் இயல்பாகவே தன்னிடத்து நிகழுமன்பால் ஆன்மா சுக சொரூபமாம். அகந்தையற ஆன்மா சொருபத்தை உள்ளபடி யுணர்ந்தோர்க்கு அவ்வடிவாகவே விளங்கும் பரனிடம் சுபாவமாகவே கசியும் பக்தியால் ஆன்ம ஞானமே பரபத்தியென்று வேறு பெயராற் கூறுப்படுவதாம். எனவே பரபக்தியும் அபரோக்க ஞானமும் வேறன்றாம்.

Because of the love for oneself that naturally shines in each and every *jīva,* the Self is the very form of bliss (*sukha-svarūpa*). For those who know the Self (*ātma-svarūpa*) as it is when the ego is eradicated, [there arises] a naturally heart-melting love for the Supreme which shines as that Self. It is because of this love that knowledge of the Self (*ātma-jñāna*) is also known by the other name of supreme love (*parabhakti*). Therefore supreme love and directly intuited knowledge [of the Self] (*aparokṣa jñāna*) are not different.

13 *சாதகர் உலகியற் பத்திரிகை மோகம் ஒழியக் கடவர்.*

It behoves *sadhakas* to abandon the [reading of] newspapers and periodicals which lead to delusion.

14 *அறிவைத் தவிர்த்து மற்றகிலமொன் றில்லை.*

Apart from consciousness, nothing else whatsoever exists.

15* *நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை.*

There is no deceit which we can conceal from our own heart.

16 *முத்தியி லேனை மூன்று மடக்கம்.*

All the other three [virtue, wealth and pleasure] are contained within [the fourth, which is] liberation.

17 *வீட்டிலு மிக்க விழுப்பத மில்லை.*


There is no state more sublime than liberation.

18 *தன்னைப் போல்ப் பிறனை நினை.*

Regard others as if they were yourself.

19* *மனத்தைப் போல விவத்தை யற்றது வேறில்லை. அதன் காட்சி அறவே நம்பத் தக்கதன்று. வியபிசரித்தலே மனத்தின் சுபாவம். அற்றம் பார்த்து ஸாதகனைக் காலை வாரிவிட்டு விஷயங்களிற் பாயும். மனம் உயிர்த்திருக்குமளவும் அதன் குணமும் மாறாது. எனவே, இடையறாத் தியான விசாரங்களால் மனத்தை அடியோ டழிக்க வேண்டும். அவ்வாறு கெடுக்கும் வரை அறிஞ னெவனும் கிருத கிருத்தியனாக அமைதியுற லாகாது.*

There is nothing so unstable as the mind. Its appearance is entirely untrustworthy. The mind's very nature is to deceive and mislead. At the very first opportunity it will hog-tie the *sadhaka* and plunge into the world of phenomena. As long as it exists its nature will never change. Therefore it must be destroyed at the root through unrelenting meditation based on enquiry. Until it is thus eradicated no wise person should be at ease, assuming that his task is complete.


4

20 பிறப்பிறப்பென்பது பேதைமைக் கனவு. 'பிறப்போ டிறப்பென்னுஞ் சித்த விகாரக் கலக்க' மெனவும், 'மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்க' மெனவும் மணிவாசக மறை ஓதல் காண்க

20* *பிறப்பிறப்பென்பது பேதைமைக் கனவு. 'பிறப்போ டிறப்பென்னுஞ் சித்த விகாரக் கலக்க' மெனவும், 'மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்க' மெனவும் மணிவாசக மறை ஓதல் காண்க.*

What is called birth and death is a dream born of ignorance. See how Manikkavacagar in his Tamil Veda speaks of, 'The confusion of the mental flux known as birth and death,' and 'the delusion of these two known as birth and death.'

21 *முழுமுதலான கடவுள் அகண்டாத்துவிதப் பரவெளி வடிவராதலால் அவர் தமக்கன்னிய மொன்று மறியார். அவர் சொரூபமான அப்பூரண சுத்த சைதன்யமே திருவருளுண்மையாம்.*

The form of the primordial God is the undivided, non-dual, infinite expanse [of consciousness]. Therefore He knows nothing that is other than Himself. The real nature of divine grace is only that all-embracing, pure, awareness that is his very nature.

22* *கடவுளுங் குருவும் (இருவரும் உண்மையில் வேறல்லர்) அருளே வடிவாயிருத்தலால், அவரது ஸங்கல்ப பூர்வமாகவே அடியார்பாற் றிருவருள் நிகழ வேண்டுமென்ற நியதி சிறிதுமில்லை.*

God and guru (in reality the two are not different) are of the very form of grace. There is therefore not the least necessity for them to intentionally bestow divine grace upon devotees through thought (*saṃkalpa*).

23 *நேரிற் காணப்படு முயிர்கள் பால் அகமகிழ்ந்தன்பு பூண மாட்டாதார் காணப்படாக் கடவுளின் பொருட்டுக் காதலாய்க் கசிந்துருகல் விந்தையிலும் விந்தை!*

That those who refuse to joyfully bestow their affection upon the beings they see and meet at first hand will melt and dissolve in love for a God who cannot be seen is indeed the wonder of wonders!

24 *அகந்தை மமதைகளை எவ்வளவுக் கெவ்வளவு தம்மிதயத்தினின் றகற்றுவரோ அவ்வளவுக் கவ்வளவு இறைவனுக் கபிமுகமாக அணித்தாகின்றார்.*

To whatever extent they drive from their hearts thoughts of 'I' and 'mine', to that same extent shall they turn towards the Lord and draw near to Him.

25* *இறைவனை ஏமாற்றும் வஞ்சர் தம்மையே ஏமாற்று வோராவர்; தம்மை எவரும் ஏமாற்ற முடிடா தென்னின் இறைவனையும் ஏமாற்ற முடியாது. என்னை? நெஞ்சை யொளித் தொரு வஞ்சக மின்மையாலும், அந்நெஞ்சக் கரியாகவே இறைவன் நிகழ்த லாலு மென்க.*

நெஞ்சை கரந்தொரு வஞ்ச மிலாவந்
நெஞ்சக் கரியாய் நிகழ்வோன் போற்றி — ஸ்ரீ ரமண சந்நிதிமுறை.

Those wicked ones who would deceive the Lord deceive only themselves. If no one can deceive himself, then it follows that no one can deceive the Lord either. Why so? Because there is no evil deed which we can conceal from our own heart and equally because the Lord exists as the witness of that heart.

Praise to the One who exists as the witness of the heart,
the heart from which no evil deed can be concealed!
— *Sri Ramana Sannidhimurai.*

என்னே! நெஞ்சை யொளித்தொருவஞ்சகமின்மை
யாலும் அந்நெஞ்சக் கரியாகவே இறைவன்
நிற்றலாலு மென்க.

26. இறைவன்பால் அருளை எதிர்நோக்குவோர்
அவர்வடிவான ஆருயிர்களிடம் அன்பு பூணல்
வேண்டும்.

27 கடவுள், அருளுருவான மானிடம் பூண்டு பெரும்
பாலும் வெளிவந்தும், அருவாகவே அறிவுக்கறி
வாகச் சிறுபான்மை உள்ளிருந்தும் அதிகாரிகளுக்
கேற்பத் தத்துவத்தை அறிவுறுத்துவார்.

28 முற்றும் பண்பட்ட தூய மனமுடையோர் அம்
மனச் சாக்ஷிக்கேற்ப வொழுகல் சாலப்பொருந்தும்.

29 இயமமே சாதன வழியுள் முதல்

30 இயமத்திற் கடைப்பிடித் தொழுகக் கற்பதே
யதார்த்தமாகக் கற்க வேண்டிய முற்பாடமாம்.

31 தமக்குரிய நிலைமைகள் எத்தகையவாயினும்
ஸாதுக்கள் அவற்றைச் சிறிதும் பிரகடனம்
பண்ணலாகாது; பண்ணில் அவர்கள் பிராண
பதமான ஸ்வரூபத்துக்குக் கடைசிவரை பெறுதற்
பிரதிபந்தகமாம்.

32 பெண்டிர் முதலாயினோர் பிரணவஜபம் பண்ணு
வலாகாதென்பது ஆன்மாவை நிர்வாண அநுபந்

26 இறைவன் பாலருளை எதிர் நோக்குவோர் அவர் வடிவான ஆருயிர்களிடம் அன்பு பூணல் வேண்டும்.

Those who live in expectation of the Lord's grace must needs harbour love for the beloved creatures who share his form.

27 கடவுள், அருளுருவான மானிடம் பூண்டு பெரும்பாலும் வெளிவந்தும், அருவாகவே அறிவுக் கறிவாகச் சிறுபான்மை உள்ளிருந்தும் அதிகாரிகளுக் கேற்பத் தத்துவத்தை அறிவுறுத்துவார்.

Although God usually appears in a human form as the embodiment of grace, on occasion He will impart the true knowledge of Reality dwelling within formlessly as the consciousness of consciousness itself. This depends upon the degree of fitness of the aspirant.

28 முற்றும் பண்பட்ட தூய மனமுடையோர் அம்மன சாக்ஷிக் கேற்ப வொழுகல் சாலப் பொருந்தும்.

It is entirely fitting for those who possess a pure mind that has been thoroughly reformed to conduct themselves taking that mind as their witness.

29 இதயமே ஈசன் வதியும் கோயில்.

The Heart alone is the temple where the Lord dwells.

30 இதயச் சுத்தங் கடைப்பிடித் தொழுகக் கற்பதே யதார்த்த ஸாதுக்கள் கற்க வேண்டிய முதற் பாடமாம்.


The first lesson that true *sadhakas* must learn is to conduct themselves with a firm resolve to maintain their purity of heart.

31* தமக்குரிய திறமைகள் எத்தகைய வாயினும் ஸாதுக்கள் அவற்றைச் சிறிதும் பிரகடனம் பண்ணலாகாது. பண்ணில் அவர்கள் பிராண பதமான ஸாதனத்துக்குக் கடைசிவரை பெரிதும் பிரதிபந்தகமாம்.

Whatever abilities they may possess *sadhakas* should not flaunt them in the least degree. If they do so, it will remain to the very end a great obstacle to their *sadhana*, their most important endeavour, to attain the refuge for the soul.

32 பெண்டிர் முதலாயினோர் பிரணவ ஜபம் பண்ண லாகா தென்பது ஆன்மாவை ஒருவன் அனுசந்தானம் பண்ணலாகா தெனத் தடுத்தற் போல்வதேயாம்.

To maintain that women and others should not repeat the holy syllable Om (*praṇava japa*) is like prohibiting someone from contemplating the Self.



33 *அதி அறிஞரா லறவே கடியத்தக்கதாம்; அளவுக்கு மிஞ்சினா லமுதமு நஞ்சாம்.*

Excess should be altogether avoided by the wise. Even ambrosia, taken to excess, is a poison.

34 *உதாசீன வாழ்க்கையே உத்தம வாழ்க்கை.*

The life lived in detachment is the noblest life.

35 பற்றறப் படைப்பற, நாடகம் போல விஞ்ஞாலத்து நட.

Conduct yourself in this world as if in a drama, without attachment and without agitation.

36* உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம் – இத்தனைகோ இவ்வுலகத் திவ்வளவு பாடு.

A measure of rice to eat and four cubits of cloth to wear [is all we need]. Is it for just this that we endure such suffering in the world?

37* ஒருவரையும் உல்லங்கனமாகத் தூக்கி யெறிந்து துச்சமாகப் பேசாதே; துள்ளின மாடு பொதி சுமக்கும்.

Do not speak harshly to, ignore and reject anyone. An unruly bullock will come to bear a [greater] burden, (i.e. he will not escape punishment).

38 அறிவினுஞ் சால வடக்கம் பெரிது. உணர்வினுஞ் சால வொழுக்கம் பெரிது.

Self-restraint is much more important than knowledge. How we act is more important than what we think.

39 பிறனை யிகழ்வான் தன்னை யிகழ்வான்.

He who reviles another reviles himself.

40 தனித்தன்மை யாஞ்சிச் சடவகங்கார மற்றனைத்துந் தானாமெய் யறிவா விளங்கு.

Shine with the true awareness that all is one's Self, free of individuality, which consists of the ego which is an amalgam of the sentient (*cit*) and the insentient (*jada*).

41 எவரேனுந் தன்னை யிகழ்ந்து தூற்றின் அதற்கேதுவும் எளிதிற் றானாக வறிய லாகாததுமான தன் குற்றத்தைத் தானறிந்து சீர்திருத்திக் கொள்ளத் தனக்கவகாச மளித்தற்காக அவர்பால் நன்றி பாராட்டுங் கருத்துடைய னாதலன்றி, நேர்மாறாக அக்குற்றத்தின்கட் பிடிவாதஞ் செய்தழுந்தலும் அவரை வெறுத்துப் பழித்தலும் தனக்கு விரைவில் வரக் கடவதாய கேட்டுக்கு அவற்றை முன்னறி குறிகளாக அறிஞனறியக் கடவன்.

Should anyone scorn you and spread slander about you, your attitude should be one of gratitude towards them for giving you the opportunity of recognising and correcting some fault that you might otherwise not easily have noticed yourself. The wise will be aware that, if, conversely, you cling stubbornly to that fault and hate and disparage that person, these are sure presages of the ruin that is destined soon to overtake you.

7

அக்குற்றத்தின்கட் படுவாருஞ் செய்தவிடத்தும்
அவரை வெறுத்துப் பழித்தும், தனக்கு விரைவில்
வரக்கடவதாய கேட்டுக்கே அவற்றை முன்
னறிகுறிகளாக அறிந்துணரக் கடவன்.

42 இஃது எங்கிருந்து தோன்றிற்று. இதன் மேலென்ன.
என்னுமாராய்ச்சியை எழுப்புமேற்றால் கற்பனை
கடந்த பொருணோக்கப்பட்டவே கற்பனைவந்தகாரண
மாம்.


43 ஆன்ம சுபாவநிலையான மரணம் உண்மைமரணம்
போல ஆருயிர்க்கு மருட்டல் மகோன்மையமான
ஜீவபோதவழிவக் கிருத்தியமே (போலி) விபரீத ஞானமாம்.
அதுவன்றே, சிவபோதம் (பரபோதம்) அல்லது
சுத்தசைதன்ய சொரூபமான முத்திக்கேது
அஞ்ஞானம் அழிய வேண்டுவதாகின்றது -
அகந்தை நாசம், ஆன்மலயமர்ப்பணம், தன்னிழப்பு,
மனோநாசம், வாசனாக்ஷயம் முதலிய பரியாயங்க
ளான், முடிந்த முத்தியுபாயமாக நூல்கள் இயம்பித்
தீர்க்கலுறுவது அம்மரணத்தையேயாகவறிக.
திருவாசகச் செத்திலாப்பத்தும் அப்பொருளையே
நுதலியதாம். 'செத்தாரைப் போலே திரி' எனப்
பட்டினத்தடிகளும் பணிப்பர். இது போலவரும்
ஆன்றோர் வாக்குகள் இன்னும் எண்ணிலவாம்.

42 *இஃது எங்கிருந்து தோன்றிற்று? இதன் மூலமென்ன? என்னு மாராய்ச்சியை எழுப்பு முகத்தால் கற்பனை கடந்த பொருளைக் காட்டவே கற்பனை வந்த காரணமாம்.*

The reason false imagination arises is to reveal the reality that transcends those imaginary appearances by instigating the enquiry as to wherefrom did they arise and what is their source.

43* *ஆன்ம சுபாவ நிலையான மரணம் உண்மை மரணம் போல ஆருயிர்களை மருட்டல் மனோமயமான ஜீவபோத வடிவுக் கிருத்திரிம விபரீத ஞானமாம். அதனாலன்றே, சிவபோதம் (பரபோதம்) அல்லது சுத்த சைதன்ய சொரூபமான முக்திக்கு முன் அஞ்ஞானம் அழிய வேண்டுவதாகின்றது. அகந்தை நாசம், ஆன்ம ஸமர்ப்பணம், தன்னிழப்பு, மனோநாசம், வாசனா க்ஷயம் முதலிய பரியாயங்களான், முடிந்த முத்தியு பாயமாக நூல்கள் சிறப்பித்துக் கூறுவது அம்மரணத்தையே யாக வறிக. திருவாசகச் செத்திலாப் பத்தும் அப்பொருளையே நுதலியதாம். 'செத்தாரைப் போலே திரி' எனப் பட்டினத்தடிகளும் பணிப்பர். இதுபோல வரும் ஆன்றோர் வாக்குகள் இன்னும் எண்ணிலவாம்.*

That which deludes people into thinking that the 'death' in which one dwells as the nature of the Self is actual death is the perverse, erroneous understanding whose nature is the ego-consciousness whose form is the mind. Is it not so, therefore, that as a prerequisite for gaining that liberation, whose nature is pure consciousness, or Siva consciousness (consciousness of the Supreme), it is necessary to destroy that false understanding? Know that that which the scriptures praise as the means for final liberation, using such synonyms as 'the destruction of the ego', 'the offering up of one's self', 'the loss of one's self', 'the annihilation of the mind' and 'the destruction of inherited predispositions (*vasanas*)' is only that 'death'. The decad, 'I have not died' in the *Tiruvacakam* illustrates this point. Saint Pattinattar too in a similar vein sings, 'Go about as ones who have died.' Such expressions by the great saints are too numerous to count.



44 உண்மையாளர் எழுத்துப் பேச்சிரண்டிலு மொப்ப மிக மிதமாயிருக்கக் கடவர்; இன்றேல் அறிந்தோ அறியாமலோ உண்மையினின்று தவறுதல் நிச்சயம் நிகழும். அதிகப் பேச்சா லனர்த்தம் விளையும்.

People of integrity should exercise great moderation both in what they write and in what they say. Otherwise, it is certain that, knowingly or unknowingly, they will deviate from the truth. Excessive speech will give rise to nonsense.

45* *சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே அறிவுடைமைக் கழகு. அதிகப் பேச்சா லறியாமையே வெளிப்படும்.*

> பலசொல்லக் காமுறுவார் மன்றமா சற்ற
> சிலசொல்லல் தேற்றா தவர்
>
> – திருக்குறள் v. 649.

To express one's thoughts clearly using just a few words is the ornament of wisdom. Excess verbiage will only highlight one's ignorance.

> Many words they'll delight to use, who have not learned
> to make their point with just a carefully chosen few.
>
> – *Tiru-k-kuraḷ* v. 649.

46 *பேசிய பேச்சை அழித்துப் பேசலாகாது. உயிர்க்கே ஊறு நேர்வதாயினும் சொன்ன சொல்லைப் பாதுகாத் தொழுகல் வேண்டும். எதனையும் இரு காலாராய்ந்த பின்பே ஒருகாற் பேசும் பயிற்சி பெற்றாலன்றி, அவ்வாறு கடைப்பிடித் தொழுகல் எவரானு மியல்வதன்று.*

You should not contradict yourself. Even at risk to your very life, you should behave strictly in accordance with the words you have spoken. [However] it is not possible for anyone to behave with such firm resolve regarding anything whatsoever unless they have perfected the practice of saying something once only after thinking it over twice.

47 *எவர்க்குமே எளிதிற் றெளிவாக விளங்கத்தக்க சிறு சிறு ஆப்தக் கிரந்தங்களைப் பண்டிதர்க்கே அரிதிற் பயன்படத்தக்க சாஸ்திர ஜடிலமாகச் சாலப் பரக்கச் சமைத்தலே பாஷ்யங்களுக் குரிய பண்பும் பயனும் போலும்! நன்று. நன்று.*

It would seem that the nature and usefulness of learned commentaries (*bāṣya*) is that they take extremely, brief, practical texts, suitable to be easily and clearly understood by all, and vastly expand them into convoluted sastraic tangles that are useful, on rare occasions, only to the learned. How good. How good indeed.

48 *தன்னாற் செய்தற் கியலாத காரியத்தைச் செய்து தருவதாகத் தாக்ஷண்யத்தால் வாக்களித்துப் பின்பு பொய்ப்படலினும், முன்பே, தாக்ஷண்ய பங்க நிகழுமாயினும் அது தன்னா லாகாதென்று மறுத்து விடலே அறத்தோடியைந்த அறிஞர் தொழிலாகச் சால்புடைத்தாம்.*

> இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
> வசையன்று வையத் தியற்கை – நசையழுங்க
> நின்றோடிப் பொய்த்தல் திரைதொடீஇ செய்ந்நன்றி
> கொன்றாரின் குற்ற முடைத்து. – நாலடியார் v. 111.

Rather than promising as a kindness something they are not able to deliver and then reneging on their promise, the wise will refuse in the first instance,

9

மாயினும் அது தன்னுடையதாகாதென்று மறுத்துவிடவே
அறத்தேவதையைத் தந்த அறிஞர் தெளிவாகச் சாய்புரைத்தனம்.
இசையா வொருபொருளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை — நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீ செய்வதின்றி
தொன்றாமற் குற்ற முடைத்து (நாலடியார்).

49 அர்ச்சுனன், அனர்த்த மேதுவான அருவேச
வுணர்ச்சியை அறவே தணக்கியாள்வது
மட்டுமன்றி அதன்வசப்பட்டோரிடமும்
அதிஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும்;
இன்றேல் விளைவுப் [illegible] பழிபாவங்கள் கொள்ள நேரிடும்.
எனவே கடுமொழிவரைவு அத்தகையோரைத்
தவிர்ப்பது கடனாமென்னலாம்.

50 உலகியலில் அதனையும் பெற்றுவிலை கொடுத்தன்றி
எதனையும் பெறமுடியாமைபோலப் பரமார்த்திகமும்
அனைத்துக் கொல்பதமான தன்னையர்ப்பித்தன்றி
மெய்ஞ்ஞான சச்சிதானந்த பரமான்மசொரூபத்தை
அடைதலியலாது. அதுவனையும்
பரமான்மசொரூபப் பெருமையை நோக்க
அதற்கீடாகத் தனக்குள்ள அன்மையர்ப்பணை
விலை ஆராயுங்கால் அறவே சிறிதாம்.
தந்தை தன்னைக் கொண்டான் தன்னைக்

saying that it is not within their power, even at the cost of incurring disgrace on that account. Such is the excellence of the wise whose actions are aligned with moral virtue.

> Maid whose arms are stacked with bracelets, there is nothing wrong in refusing to give that which it is not within one's power to grant. That is the way of the world. But to continually offer something without actually giving it, until the person requesting it gives up the desire for it, is equivalent to the sin of one who forgets a good deed done to him – *Nālaṭiyār* v.111.

49 *அறிஞன் அனர்த்த ஹேதுவான ஆவேச வுணார்ச்சியை அறவே தானடக்கி யாள்வது மட்டுமன்றி அதன் வசப்பட்டோரிடமும் அதி ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இன்றேல் வீணாகப் பின்பு கழிவிரக்கங் கொள்ள நேரிடும். எனவே கூடுமானவளவு அத்தகையோரைத் தவிர்ப்பதுகூட நலமென்னலாம்.*


The wise person should restrain and control completely the frenzied state of mind that courts disaster. Not only that, he should behave with extreme caution towards those who are under its control. Otherwise he may needlessly come later to regret it. Therefore he should take the attitude that the best plan is to avoid such people altogether as far as it is possible.

50* *உலகியலில் அதனதனுக் கேற்ற விலை கொடுத்தன்றி எதனையும் பெற முடியாமை போலப் பரமார்த்தத்திலும் அனைத்துக்கு மாஸ்பதமான தன்னை அர்ப்பித்தன்றி, முழு முதலான ஸச்சிதானந்த பரமான்ம சொருபத்தை ஒருவரடைத லியலாது. ஒருவனடையும் பரமான்ம சொரூபப் பெருமையை நோக்க அதற்கீடாகத் தானளிக்கும் ஆன்ம சமர்ப்பண விலை ஆராயுங்கால் அறவே சிறிதாம்.*

> தந்த துன்றன்னைக் கொண்டதென் றன்னைச்
> சங்கரா யார்கொலோ சதுரர்
> அந்தமொ றில்லா ஆனந்தம் பெற்றேன்
> யாதுநீ பெற்றதொன் றென்பால்.

*எனப் பெரியோர் பேசலால் அவ்வாறு செய்யும் பரிவத்தனை எவ்வளவோ லாபகரமாதல் காண்க.*

*(இது துவித பாஷையாற் கூறிற்று. காரியார்த்தமாகப் பூண்ட தோட்டி வேஷத்தைக் களைதலானே தோண்டமா னரசன் அரசனாக விளங்கல் போலக் கற்பித ஜீவ போதத் தியாகத்தானே நிஜான்ம ஸாஷாத்காரம் பெற வேண்டு மென்பது அத்துவித பக்ஷக் கருத்து (ஜீவபோதம் – நானென்னு மகங்கார வடிவத் தனித்தன்மை யுணர்வு, நிரந்தர மின்றி எழுந்தொடுங்கு மியல்பால் இதுவே தன்மையி னுண்மை யன்றாம்). தன்னையே பரிதானமாக – பலியாக வழங்கி அதற்கீடாகக் கொள்ளத்*



10

சங்கரா யார் கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால் — எனப்
பெரியோர் பேசலால் அவ்வாறு செய்யும் பரி
வர்த்தனை எவ்வாறோ வாயதாமாதல் காண்க.
[இது தாவிதபானந்தயார் கூறிற்று. சாரியார்த்த
மாதப்புணட தேற்கூ சேவதத்தைத்தினைத்தவா
னே தெரிண்டமானதசன் அரசனுக்கவினவல்
போலக் காஞ்சித் தீவபோதத்தியாக்கிதானே
நிஜாண்மை பாவுதாதகரம் பெற வேண்டுமென்பது
அத்துவித பதைக்கருத்தீ (ஜீவபோதம் - நாசென்று
மகங்காரவடிவத்தனித்தன்மையுணர்வு. நிரந்தர
மின்றி எழுப்பதொடுக்கு மியல்பால் இதுவே
தன்மையினுண்மையென்றுமே. தன்னையே பரி
தானமாக - பரியாகாவதுங்கி அதற்கேடாகக்
கொள்ளைத்தக்க வேறு பொருளில்லையன்றே -
என்றும் தமை இதனைப் பரிகாரமாதலாமிதி].
51 அடக்கப்படாத குதிரைபோல அடக்கப்படாத
பேச்சும் அதினால் ஆபத்துக்கொள்ளாக்கும் எனவே
அற்பமேம் அதுவிட்டவல் அடக்கவென்று
கடிவாளந்தனை என்னும் விருப்பமிருக்கவேண்டும்.
யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோ

*தக்க வேறு பொருளில்லையன்றே என்னும் தடை இதனாற் – பரிகார மாத லறிக.)*

Just as in worldly affairs nothing can be obtained without paying the appropriate price for it, so, in the realm of the supreme Reality, no one can realise the nature of the supreme Self, being-consciousness-bliss, the source of all that is, without offering up his own self, which is the support of all things [in the world]. Compared to the greatness of the supreme Self which is thus attained, the price of the sacrifice of one's own self that is paid for it in return, is, when we think about it, an exceedingly small one.

You gave yourself to me and in exchange that gained by you
was only me. Then who, O Sankara, is wiser of the two?
That which I obtained was utter and unending bliss,
but what one thing did you obtain from me in this?

We may judge from such expressions by the great saints exactly how profitable an exchange made on such terms will be.

(Here we are speaking in the language of duality. The advaitic point of view states that, upon the abandonment of the imaginary ego consciousness, the realisation of the eternal Self must occur, just as the Tondaman king appeared once more as a king, once he had removed the disguise of a servant, which he had assumed for a certain purpose. (Personal (*jīva*) consciousness is the awareness of individuality, which is of the form of the ego which says 'I'. Due to the attribute whereby it is not continuous but arises and subsides, this is not in its nature real). The 'bartering' of oneself must mean the 'destruction' of oneself, because of the objection that, [from the advaitic point of view] upon the offering up of oneself, there exists nothing equivalent which is fitting to be accepted in return.)

51 *அடக்கப்படாத குதிரை போல அடக்கப்படாத பேச்சும் ஆளை ஆபத்துக்குள்ளாக்கும்; எனவே அற்பமும் நெகிழ விடாமல் அடக்க மென்னுங் கடிவாளத்தை என்று மிறுக பிடிக்க வேண்டும்.*


யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

– திருக்குறள் v. 127.

Like an untamed horse, unrestrained speech also will bring calamity upon a man. Therefore always draw tightly on the bit called self-control, never loosening your grip for a second.

Whatever else you fail to guard, guard your words. Or else,
through a slip of the tongue, much misery will be felt

– *Tiru-k-kuṟaḷ* v. 127.



52 *பேச்சைப் பெருக்குவோர் அறிவைச் சுருக்குவோர்.*

Those who are expansive in speech will shrink in knowledge.

53 *பேச்சை விரிப்போர் கருத்தைக் கரப்போர்.*

Those who speak at length conceal their intent.


54 *அடக்கத்தின் மிக்க வணிகலமில்லை.*

There is no greater ornament than self-control.

55* *உன்மையில் அமரரான மக்கள் மனமாகிய மதுபான மயக்கத்தால், அறிவு கலங்கி அந்தோ பாவம், மரராக மரித்துக் கழிகின்றார். என்று அம்மதுபான மயக்கந் தீர்வரோ அன்றே மீண்டும் தம்மியல்பான பழைய அமரத்துவ மடைந்து விளங்குவர். மனமே பிரமாத வடிவான மரணம் என்பது நம் மகர்ஷிகள் கண்ட உண்மை. ஆதி மனுஷ்யர்களான ஆதாமேவாள், தன் சாயையாகவே தம்மைப் படைத்த இறைவனாணையைக் கடந்து தம்மிதத்துக்காகவே அவனால் விலக்கப்பட்ட நிஷித்த பலத்தை அவாவிச் சுவைத்து அதனால் அவர் தாமே யன்றி சந்ததியாரும் தெய்வத் தன்மையிழந்து நிரந்தரமாகச் சீர்கேடுற்றனர் — என்னும் விவிலியப் பூர்வாகமச் செய்தியில் நிஷித்த பலமென்று இம்மனமே குறிக்கப்பட்டது.*

*தாமாணை யிட்டதனை ஆணையிட்டபடியே ஏனென்று கேளாதியற்ற வேண்டுமென்று மக்களை வற்புறுத்தி வேதங்கள் விதிப்பது, மனமே கூடாதவற்றைக் கூட்டுவிப்பதும், நல்லதைக் கெட்டதும், கெட்டதை நல்லதுமாக மருட்டுவதுமான விசித்திர மாயா சக்தி யாதலால் அத்தகைய மனத்தால் மட்டுமே ஸநாதன தர்ம ஸ்வரூபம் இன்ன தென்று யாராலும் மதித்தற்கரி தென்னும் இக்காரணம் பற்றியேயாம். எனவே, பலபடியாலும் மனிதனுக்கு மனத்தின் தொடர்பு அறவே கடியத் தக்க தென்பதாம்.*

